# தமிழ்நாட்டில் நவோதயா பள்ளிகள் வேண்டாம்; தேவைப்பட்டால், சிறப்புச் சட்டமன்றக் கூட்டத் தொடர் கூட்டித் தீர்மானம் நிறைவேற்றுவோம்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிக்கை!

**சென்னை, செப்.19– தமிழ்நாட்டில் நவோதயா பள்ளிகள் வேண்டாம், தேவைப்பட்டால், சிறப்புச் சட்டமன்றக் கூட்டத் தொடரைக் கூட்டித்தீர்மானம் நிறைவேற்றுவோம் என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

**இது குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:–**

நவோதயா பள்ளிகளைத் தமிழ்நாட்டில் அனுமதிப்பது தொடர்பான வழக்கில்.. "தமிழ்நாடு, இந்திக்கு எதிரான தனது மனநிலையை மாற்றிக்கொள்ள வேண்டும்; மாநிலங்கள் தனி நாடுகளாக இயங்க முடியாது" என்று மாண்பமை உச்ச நீதிமன்றம் கருத்துத் தெரிவித்திருக்கிறது.

இந்த நேரத்தில், நாங்கள் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம். இந்தி உள்ளிட்ட எந்த மொழிக்கும் நாங்கள் எதிரானவர்கள் இல்லை. தமிழ்நாடு தனிநாடாக இயங்கவில்லை; தனித்தன்மையுடன் இயங்குகிறது.

### இந்தித் திணிப்புதான்

இந்தியைத் திணிப்பதுதான் தமிழ்நாட்டை இந்தியாவிலிருந்து தனித்தீவாக அந்நியப்படுத்தும். `வேற்றுமையில் ஒற்றுமை' என்பதை மதித்து, அந்தந்த மாநிலங்கள் தாங்கள் விரும்பும் மொழிக் கொள்கையைப் பின்பற்ற அனுமதிப்பதே, இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு மேலும் வலிமை சேர்ப்பதாக அமையும்.

`இந்திய சீனப் போர்', `வங்கதேச விடுதலைப் போர்', `கார்கில் போர்', `குஜராத் நிலநடுக்கம்' என நம் நாடு சந்தித்த ஒவ்வொரு இக்கட்டான சூழலிலும் தமிழர்கள் தங்களுடைய நாட்டுப்பற்றை, வேறெந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும் குறைவில்லாத வகையில் வெளிப்படுத்தியுள்ளனர்.

எனவே, `இந்தி மொழித் திணிப்பு வேண்டாம்' என்று கூறுவதாலேயே தமிழர்கள் தனி நாடாக இயங்குவதாக எடுத்துக்கொள்ள முடியாது. இந்தியைக் கற்பதற்கும் நாட்டுப் பற்றுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

### இருமொழிக் கொள்கை

இருமொழிக் கொள்கையைப் பின்பற்றும் தமிழ்நாடுதான், அனைத்துத் துறைகளிலும் இந்தியாவின் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. உயர்கல்விச் சேர்க்கையில் முதலிடம் வகிக்கிறது. நாட்டிலேயே, தொழிற்சாலைகளில் பெண்கள் அதிகம் பணிபுரியும் மாநிலமாகத் திகழ்கிறது. நோபல் விருதாளர்கள் முதல் இஸ்ரோவின் முன்னணி அறிவியலாளர்கள் வரை, இந்தி தெரியாமலேயே தமிழர்கள் சாதனைகளைப் படைத்துள்ளனர்.

எனவே, இந்தி தெரியாததால் தமிழ்நாடு எந்தவிதத்திலும் பின்னடைவைச் சந்திக்கவில்லை. மாறாக, தமிழ்நாடு மற்ற மாநிலங்களைக் காட்டிலும் சிறப்பான வளர்ச்சியை எட்டியிருக்கிறது; இந்தியாவின் வளர்ச்சி இன்ஜினாகத் தமிழ்நாடு விளங்குகிறது.



### திராவிட மாடல் ஆட்சியில் உறுதியான வாதங்கள்!

நவோதயா பள்ளிகளை அனுமதிப்பது தொடர்பான வழக்கில், முந்தைய திராவிட மாடல் அரசின் சார்பில் உறுதியான வாதங்களை எடுத்து வைத்தோம்.

அரசியலமைப்புச் சட்டத்தில், கல்வி ஒத்திசைவுப் பட்டியலில் இடம்பெற்றுள்ளதால், ஒன்றிய அரசின் கொள்கையை அப்படியே நிறைவேற்ற வேண்டிய தேவையில்லை. தமிழ்நாட்டில் ஏற்கனவே மாதிரிப் பள்ளிகள் எனும், உண்டுஉறைவிடப் பள்ளிகள் மூலமாக அனைத்து மாவட்டங்களிலும் பின்தங்கிய ஏழை, எளிய மாணவர்களுக்குத் தரமான கல்வி வழங்கப்பட்டுவருகிறது.

அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், தேசிய அளவிலான நுழைவுத் தேர்வுகளிலும் சிறந்த முறையில் வெற்றி பெற்று, நாட்டின் முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்றுவருகின்றனர். இந்நிலையில், நவோதயா பள்ளிகளுக்காகத் தனியாக இடம் ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை. நவோதயா பள்ளிகளுக்கு அளிக்கும் நிதியைத் தமிழ்நாடு அரசிடம் அளித்தால், தற்போது நம்மிடம் உள்ள கட்டமைப்பைக் கொண்டே சிறப்பாகச் செயல்பட முடியும்.

### தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியை வழங்கவில்லை!

மேலும், மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத காரணத்தாலேயே, `சமக்ர சிக்ஷா' திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டுக்கு வழங்கவேண்டிய 3,548 கோடி ரூபாயை ஒன்றிய அரசு நிலுவையில் வைத்துள்ளது.

> **இந்தித் திணிப்புதான்!**
>
> **இந்தியைத் திணிப்பதுதான் தமிழ்நாட்டை இந்தியாவிலிருந்து தனித்தீவாக அந்நியப்படுத்தும், 'வேற்றுமையில் ஒற்றுமை' என்பதை மதித்து, அந்தந்த மாநிலங்கள் தாங்கள் விரும்பும் மொழிக் கொள்கையைப் பின்பற்ற அனுமதிப்பதே, இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு மேலும் வலிமை சேர்ப்பதாக அமையும்.**

தமிழ்நாட்டு மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, அந்த நிதியை விடுவிக்க வேண்டும் எனப் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்திருந்தோம்.

தற்போது அந்த வழக்கில், தமிழ்நாட்டில் புதிதாக அமைந்துள்ள அரசும் நமது இருமொழிக் கொள்கையைப் பின்பற்றி, நவோதயா பள்ளிகளைத் தமிழ்நாட்டில் அனுமதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த நிலைப்பாட்டில், தற்போதைய அரசு தொடர்ந்து உறுதியான வாதங்களை எடுத்து வைத்திட வேண்டும். மேலும், தேவை எழுந்தால் உடனடியாகச் சிறப்பு சட்டமன்றக் கூட்டத்தொடரைக் கூட்டி, நவோதயா பள்ளிகளைத் தமிழ்நாட்டில் அனுமதிக்க முடியாது எனும் தமிழ்நாட்டின் நிலைப்பாட்டை வலியுறுத்தி, தனித் தீர்மானம் இயற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் இம்மண்ணில் விதைக்கப்பட்ட இருமொழிக் கொள்கையை, அரசியல் வேறுபாடுகளைக் கடந்து உச்ச நீதிமன்றத்தில் நிலைநாட்டுவோம்! மும்மொழிக் கொள்கையைத் திணிக்கும் நவோதயா பள்ளிகளைத் தடுத்து நிறுத்துவோம்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### கழகத் தலைவர் வேண்டுகோளை ஏற்று ஒவ்வொருவராகச் சந்தித்து, பொதுமக்களுடைய கோரிக்கையை கேட்டு

# கழக வெற்றிக்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல் படுவோம்!

### தாராபுரத்தில் – கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு பேச்சு!

தாராபுரம்,செப்.19–

தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் ஆலோசனைக் கூட்டம், கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யா அறிமுகக் கூட்டம் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன் வரவேற்புரையில், முன்னாள் அமைச்சர்கள் மு.பெசாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், கே.இ.பிரகாஷ் எம்.பி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கழக முதன்மைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:

திராவிட முன்னேற்ற கழகம் மீண்டும் ஒரு எழுச்சி பெறுவதற்கு ஒரு முக்கியமான தேர்தல் இந்த நடைபெற இருக்கின்ற தேர்தல். மேடையிலே நம்முடைய சாமிநாதன் யார் யாருக்கு எந்தெந்த பகுதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கு சொன்னார், அதிலே ஏதாவது சந்தேகம் இருக்குமென்று சொன்னால் கூட சாமிநாதன் அவர்களை மீண்டும் தொடர்பு கொண்டு அந்த பகுதியை தேர்ந்தெடுக்க வேண்டும். ஒரு சில பேருக்கு எங்களுக்கு மாற்றி தர வேண்டும் என்று சொன்னால் அதையும் மாற்றி தரக்கூடிய ஏற்பாடுகளை செய்து தருவார்.

நாளையிலிருந்து நீங்கள் பொறுப்பேற்று கொண்டிருக்கின்ற தலைவர்கள், வந்திருக்கிற ஒன்றிய கழக செயலாளர்கள் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களிலே இருந்து சிறப்பாக செயல்பட வேண்டும். நேற்று தலைவர் அவர்கள் எங்களுக்கு சொன்னது எல்லாரும் போய் கணக்கு காட்டிவிட்டு வந்திராதீங்க,

ஒவ்வொரு ஊராக போங்க, ஒவ்வொருத்தரா சந்திங்க, பொது மக்களுடைய கோரிக்கையை கேளுங்க, இன்றைக்கு ஆட்சியில் வந்தவர்கள் செய்திருக்கிற, தரேன்னு சொன்ன தேர்தல் அறிக்கையிலே சொன்னதை தராது இருக்கிறதை மக்கள் கிட்ட சொல்லுங்க. நீங்க போய் தேர்தல் வேலை பார்க்கிறேன்னு சொல்லி கணக்கெடுத்துட்டு ஒரு இடத்துல உட்கார்ந்துடக்கூடாதுன்னு நேத்து தலைவர் கூப்பிட்டு எங்களை கூப்பிட்டு இதெல்லாம் சொல்லுங்கன்னு சொன்னார்.

நான் சாமிநாதனிடமும், பத்மநாபனிடமும் சொன்னேன், நான் வருகின்றபோது கரூர் மாவட்ட செயலாளர் செந்தில் பாலாஜி இடம் சொன்னேன். இதை தலைவர் அவர்கள் இப்படி பேசியிருக்கிறார். இதை அனைவரும் ஒரு அளவுகோலாக எடுத்து ஒரு எச்சரிக்கையாக எடுத்து அனைவரும் பணியாற்ற வேண்டும்.

எங்களுக்கு சொல்லுகிறபோது இங்க யார் யாருக்கு எந்தெந்த பகுதியை ஒதுக்கி இருக்கிறீங்க? எங்களுக்கு உடனே அனுப்புங்கன்னு சொல்லி தலைவரும், தலைவருடைய உதவியாளரும் சொன்னார்கள். வந்திருக்கிற ஒன்றிய செயலாளர்களோடும் நம் தலைவர் அவர்களே நேரடியாக பேச இருக்கிறார்கள். எனவே எந்த நேரம் வேண்டுமானாலும் அவர் பேசுவார். ஆகவே அந்தந்த பகுதியில இருந்து பணியாற்ற வேண்டும். யாராவது நீங்க ஒரு சில பேர் அவசியம் ஏதாவது வேலை இருந்து போனீங்கன்னா மாற்று ஆள வச்சிட்டு போங்க. ஆள மட்டும் இந்த இடத்தை விட்டு போயிறாதீங்க. இது ஒரு முக்கியமான தேர்தல். இந்த இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்ற கழகம் நிச்சயமாக வெற்றி பெறும். ஏனென்று நான் சொன்னேன் என்று சொன்னால் உங்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்று சொல்வதாக கருத தேவை இல்லை,

நாம் இரண்டாவது இடத்தில் இருக்கிறோம். மூன்றாவது இடத்தில் தான் தவெக இருக்கிறது. முதல் இடத்தில் இருக்கிற அ.தி.மு.கவுக்கு மீண்டும் வாக்களிப்பார்களா என்பது சந்தேகம். எனவே நாம்தான் நிச்சயமாக இந்த தேர்தலிலே வெற்றி பெற போகிறோம் என்ற அந்த நம்பிக்கை இருக்கிறது.

தயவு செய்து வந்திருக்கிற பொறுப்பாளர்கள் உள்ளூர் செயலாளரோடு இணைந்து கொள்ளவும். நீங்க உங்களுக்கு உடனடியாக யாரையும் தெரிய வாய்ப்பிலை, ஆகவே உள்ளூர்ல இருக்கிற செயலாளரை வைத்து அவர்கள் மூலமாக இந்த பணியில் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்போடு கேட்டு தொடர்ந்து செயல்படுவோம். வெற்றி பெற வைப்போம்.

தளபதி அவர்களை மீண்டும் இந்த நாட்டினுடைய முதலமைச்சராக, உதயநிதி அவர்களை மீண்டும் துணை முதலமைச்சராக உருவாக்க பாடுபடுவோம், பாடுபடுவோம் என்று சொல்லி நம்முடைய சாமிநாதன் தலைமையிலே சிறப்பாக நாம் அனைவரும் பணியாற்றுவோம், பணியாற்றுவோம். நம்முடைய வழக்கறிஞர் சுகன்யா அவர் முதல் நாள் பேசும்போதே சொன்னார் நிச்சயமாக விலைபோகா மாட்டேன் இந்த கட்சியிலே இணைந்து பணியாற்றுவேன் தளபதிக்கு உறுதுணையாக இருப்பேன் என்று அவர் சொல்லியிருக்கிறார் எனவே வழக்கறிஞர், இந்த கட்சியிலே வழக்கறிஞராக இருக்கிறவர் நமக்காக தந்திருக்கிற முதலமைச்சர் அவருடைய வேட்பாளர். இவருடைய பரிந்துரையின் பேரிலே நம்முடைய தளபதி அவர்கள் கழக தலைவரும் உதயநிதி அவர்கள் அளித்திருக்கிற வேட்பாளர். அவரை வெற்றி பெற வைத்து நாங்கள் சட்டமன்றத்திலே எப்படி சண்டை போடுகிறோமோ எங்களுக்கு உறுதுணையாக அவரும் சண்டை போட அனுப்புமாறு உங்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏன்னா பேசி, பேசி எங்களை வம்பு இழுக்குறாங்க, செந்தில் பாலாஜி எந்திரிச்சு பேசுவார், செந்தில் பாலாஜியை பேச விட மாட்டாங்க. செந்தில் பாலாஜி பேசறதுக்கு விடறது இல்ல. நாங்களும் செந்தில் பாலாஜி, செந்தில் பாலாஜின்னு கேக்குறோம். ஏன்னா அவர் கேக்குற கேள்விக்கு பதில் சொல்ல முடியாது. அவர் சொல்றாரு மின்சார துறையை பற்றி அந்த அமைச்சருக்கே தெரியாது பூரா விவரமும் அவர் சொன்னார்.

எனவே நாங்கள் எங்களோடு உறுதுணையாக இருப்பதற்கு நம்முடைய சுகன்யா அவர்களை எங்களோடு அழைத்து செல்வதற்கு அனைவரும் பாடுபடுவோம் பாடுபடுவோம் என்று சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ், கழக ஆதிதிராவிடர் குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, மாவட்ட கழக செயலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள் சு.முத்துசாமி ஈரோடு தெற்கு, கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் எம்.எல்.ஏ., விருதுநகர் தெற்கு, தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., விருதுநகர் வடக்கு, கே.ஆர்.பெரிய கருப்பன் சிவகங்கை தெற்கு, கீதா ஜீவன் தூத்துக்குடி வடக்கு, அரா.சக்கரபாணி எம்.எல்.ஏ., திண்டுக்கல் மேற்கு, வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., கரூர், தங்க தமிழ்ச்செல்வன் எம்பி, தேனி வடக்கு, துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ, தஞ்சாவூர் மத்தி, வைரமணி திருச்சி மத்தி, காடுவெட்டி தியாகராஜன் திருச்சி வடக்கு, என்.நல்லசிவம் ஈரோடு வடக்கு, என். கௌதம் (நாகை), மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., நெல்லை மத்தி, ராஜா எம்.எல்.ஏ., தென்காசி மேற்கு, ராஜேஷ்குமார் எம்பி, நாமக்கல் கிழக்கு, கே.எஸ்.மூர்த்தி எம்.எல்.ஏ., நாமக்கல் மேற்கு, கோ.தளபதி மதுரை மாநகர், கே.கே.செல்லப்பாண்டியன் புதுக்கோட்டை வடக்கு, ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ., திண்டுக்கல் கிழக்கு, பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ., திருவாரூர், நிவேதா என்.முருகன் எம்.எல்.ஏ., மயிலாடுதுறை, மு. மணிமாறன் எம்.எல்.ஏ., மதுரை தெற்கு, கே.ஈஸ்வரசாமி எம்பி., திருப்பூர் தெற்கு, துரை செந்தமிழ் செல்வன் கோவை மாநகர், தொண்டாமுத்தூர் அ.ரவி கோவை வடக்கு, தளபதி முருகேசன் கோவை தெற்கு, ந.தினேஷ்குமார் திருப்பூர் வடக்கு, சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.ஜெயராமகிருஷ்ணன், மு.ஜெயக்குமார், மார்க்கண்டேயன், கடற்கரை ராஜ், மண்ணச்சநல்லூர் கதிரவன், கழக மகளிர் தொண்டரணி இணை செயலாளர், முன்னாள் அமைச்சர் தமிழரசி ரவிக்குமார், கழக மாணவர் அணி செயலாளர் ஜெ. வீரமணி, கழக மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ப.ராணி, துணை செயலாளர் சத்யா பழனிக்குமார், கழக மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் செ.உமாமகேஸ்வரி, திருச்சி மேயர் அன்பழகன் உள்பட இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.




---

### முதல்வர் மருந்தக பெண் ஊழியர் கத்திக்குத்து:

# "சட்டம் - ஒழுங்கை சீரழிக்கும் த.வெ.க. அரசு"!

### கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

*சென்னை,செப்.19-*

*கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:*

*பண்ருட்டியில் முதல்வர் மருந்தகப் பெண் ஊழியர் மீது நடந்துள்ள கத்திக்குத்துச் சம்பவம் மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. பட்டப்பகலில் கொலைகளும், வெட்டுக்குத்துகளும் நடப்பது சர்வசாதாரணமாகிவிட்டது.*

*பொதுமக்கள், பெண்கள், குழந்தைகள், ஏன் சிறைக் கைதிகளுக்குக் கூட பாதுகாப்பில்லை எனும் நிலையைத் தமிழ்நாட்டில் உருவாக்கி சட்டம் ஒழுங்கை தினமும் சர்வநாசம் செய்துகொண்டிருக்கிறது தவெக அரசு.*



*பண்ருட்டி சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள பெண்ணுக்கு உரிய மருத்துவச் சிகிச்சையும், பாதுகாப்பையும் அரசு வழங்க வேண்டும். குற்றவாளியின் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டம் - ஒழுங்கைப் பராமரிப்பதில் தாமதிக்காமல் இனியாவது இந்தப் பொறுப்பற்ற அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா? இல்லை ரீல்ஸ் விளம்பரங்களில் மூழ்கிக் கிடந்து மக்களின் உயிரோடுதான் விளையாடுமா?*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*